**சார்பு நீதிமன்றம், சீர்காழி**
**முன்னிலை: திருமதி S. மும்தாஜ், B.Sc., B.L.,**
**சார்பு நீதிபதி, சீர்காழி.**

**2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07–ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**மேல்முறையீட்டு வழக்குஎண்.02/2025**

**CNR NO.TNMY06–000278/2025**

சடகோபன் ...மேல்முறையீட்டாளர்/பிரதிவாதி

/ எதிர்/

விஜயலெட்சுமி ....எதிர்மேல்முறையீட்டாளர்/வாதி

இந்த மேல்முறையீட்டு வழக்கானது தரங்கம்பாடி, மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தின் அசல் வழக்கு எண்.146/2019 ல் 13.02.2025 அன்று வழங்கிய தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இடையில்.–**

விஜயலெட்சுமி ...வாதி

/ எதிர்/

சடகோபன் ...பிரதிவாதி

இம்மேல்முறையீட்டு வழக்கானது 13.03.2026 அன்று என் முன்னிலையில் இறுதி விசாரணைக்கு வந்து மேல்முறையீட்டாளர் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஏ. ராம்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மேல்முறையீட்டார் தரப்பில் வழக்கறிஞர் திரு. வி. வெங்கடேசன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும்,

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.07 19:41:54 +0530

ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தில் பரிசீலினையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**<u>தீர்ப்புரை</u>**

இந்த மேல்முறையீட்டு வழக்கானது தரங்கம்பாடி, மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தின் அசல் வழக்கு எண்.146/2019 ல் 13.02.2025 அன்று வழங்கிய தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வாதியின் சகோதரரால் வாதிக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரப்படி வாதிக்கு சொந்தமானது என்று விளம்புகை பரிகாரம் கோரியும், சட்டவிரோதமாக எதிர்வாதி ஆக்கிரமித்து வைத்துள்ள தாவா சொத்தினை எதிர்வாதி வாதி வசம் ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கக்கோரியும், செலவுத் தொகை கோரியும் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. <u>அசல் வழக்கின் வழக்குரையின் சுருக்கம்:</u>**

இவ்வழக்கின் வழக்கு சொத்து தரங்கம்பாடி தாலுக்கா, பொறையார் வட்டத்தில் உள்ள புல எண். 282/2-ல் உள்ள நஞ்சை ஒரு ஏக்கர், 69 செண்ட் ஆகும். வழக்கு சொத்து வாதியின் சகோதரரான ஆதிநாராயணன் என்பவரால் 06.09.1973 அன்று கிரயத்திற்கு வாங்கப்பட்டுள்ளது. வாதியின் சகோதரர் தனக்கு சொந்தமான வழக்கு சொத்தை பொறுத்து 10.08.1979 அன்று வாதிக்கு பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணப்படி வாதி வழக்கு சொத்தை வசத்திலும், அனுபவத்திலும் வைத்து 10.08.1979 முதல் சாகுபடி செய்து வந்துள்ளார். வாதியின் சாகுபடிக்கு அவரது சகோதரர் ஆதிநாராயணன் உயிருடன் இருக்கும் போது உதவி செய்து வந்தார். வாதியின் சகோதரர் ஆதிநாராயணன் 2010 ம் ஆண்டு அவர் இறந்தபிறகு வாதியின் சாகுபடிக்கு அவரது மகனான பிரதிவாதி அவரது தந்தை உதவி செய்து வந்தது போல் அவரும் வாதியின் சாகுபடிக்கு உதவி செய்து வந்துள்ளார். இந்நிலையில் பிரதிவாதி வழக்கு சொத்தை சட்ட விரோதமாக 3 ம்

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.07 19:42:00 +0530

நபருக்கு விற்பனை செய்ய முயற்சி செய்துள்ளார். வாதி பட்டா மாறுதலுக்கு மனு கொடுத்து ஆவணங்களை பரிசீலனை செய்து உத்தரவு பிறப்பிப்பதற்கு முன்பு எதிர்வாதி வழக்கு சொத்து தங்கள் குடும்ப சொத்து என்று வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு கொடுத்து பட்டா வழங்காமல் தடுத்து விட்டார். உண்மைகளை மறைத்து வாதிக்கு, பிரதிவாதி அறிவிப்பு கொடுத்துவிட்டு வழக்கு சொத்தில் அத்து மறி சாகுபடி செய்து வருகிறார். எனவே விளம்புகை மற்றும் வசப்பரிகாரம் கோரி வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

4. **<u>அசல் வழக்கில் பிரதிவாதியில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்:</u>**

இவ்வழக்கில் பிரதிவாதி வெளிப்படையாக ஒப்புக் கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகள் மறுக்கப்படுகிறது. தாவாச்சொத்து வாதிக்கு சொந்தமானது என்பதை வாதி நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். வழக்கு சொத்தை தனது தந்தை கிரயம் பெற்று முழு உரிமையுடன் அனுபவித்து வந்ததாக பிரதிவாதி கூறியுள்ளார். பிரதிவாதியின் தந்தை ஆதிநாராயணன் இறப்பிற்கு பிறகு பிரதிவாதி மற்றும் சகோதர சகோதரிகள் வழக்கு சொத்தை முழு உரிமையுடன் அனுபவித்து வருகின்றனர். பிரதிவாதியின் தந்தை 10.08.1979 ல் நாமினலாக வாதிக்கு சகோதரி என்ற முறையில் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணப்படி வாதி சொத்தை வசம் எடுக்காமல், அனுபவிக்காமல் மேற்படி சொத்தை அடைய இயலாது. அவ்வாறு செட்டில்மெண்ட் ஆவணம் உண்மை என்றாலும் கூட வழக்கு சொத்தை வாதி வசமெடுத்து அனுபவிக்காத காரணத்தினால் பிரதிவாதி மற்றும் அவரது சகோதர, சகோதரிகளுக்கு தாவா சொத்தை எதிர்அனுபோக முறையில் அனுபவித்து வந்து சித்தியாகிவிட்டது. செட்டில்மெண்ட் ஆவணப்படி இவ்வழக்கில்

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.07 19:42:04 +0530

கோரியுள்ள பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கக்கூடியதல்ல. எனவே இவ்வழக்கை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று பிரதிவாதி கோரியுள்ளார்.

**5. <u>அசல் வழக்கில் விசாரணை நீதிமன்றத்தில் வனையப்பட்ட எழுவினாக்கள்:</u>**

| | |
|---|---|
| 1. | தாவா சொத்தின் உரிமை மூலம் குறித்து வாதி கோரும் விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? |
| 2. | தாவா சொத்தை பொறுத்து வாதி கோரும் வசப்பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? |
| 3. | இதர பரிகாரங்கள் என்ன? |

**6. <u>அசல் வழக்கின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்:</u>**

அசல் வழக்கின் வாதி தரப்பில் வாதி விஜயலெட்சுமி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வாதி தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதி தரப்பில் பிரதிவாதி சடகோபன் பி.வா.சா.1 ஆகவும், செல்வம் என்பவர் பி.வா.சா.2 ஆகவும், பழனிவேல் என்பவர் பி.வா.சா.3 ஆகவும், ரெத்தினகுமார் என்பவர் பி.வா.சா.4 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர். பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.22 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**7.** விசாரணை நீதிமன்றம் வாதியின் வழக்கை அனுமதித்து அசல் வழக்கு எண்.146/2019 வழக்கில் 13.02.2025 தேதியில் வழங்கியுள்ள தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக பிரதிவாதி இந்த மேல்முறையீட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

8. **<u>மேல்முறையீட்டு வழக்கிற்கான காரணிகளின் சுருக்கம்:</u>**

விசாரணை நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை சட்டப்படியும், நியாயபடியும் நிலைக்கக்கூடியதல்ல. கீழமை நீதிமன்றம் இந்த வழக்கில் வா.சா.ஆ.1 ஆவணம் பெயர் இரவலாக எதிர்மேல்முறையீட்டாளர் பெயரில் வாங்கியுள்ள

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.07 19:42:09 +0530

காரணத்தினால் தான் தாவா சொத்து எதிர்மேல்முறையீட்டளார் குடும்பத்தில் வா.சா.ஆ.1 ஏற்பட்ட தேதி முதல் நாளது தேதி வரை இருந்து வருகிறது என்பதை கவனிக்க தவறிவிட்டார். கீழமை நீதிமன்றம் மேல்முறையீட்டாளரும் அவரது தகப்பனாரும் தொடர்ந்து தாவா சொத்தை வா.சா.ஆ.1 காலம் முதல் உரிமையாளர என்ற முறையில் சொத்தை அனுபவித்து வந்துள்ளதால் தாவா சொத்து மேல்முறையீட்டாளர் கூற்றுப்படி பெயர் இரவலாக எதிர்மேல்முறையீட்டாளர் பெயரல் வாங்கப்பட்டது என்பதை ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும். கீழமை நீதிமன்றம் மேல்முறையீட்டாளர் ஏற்கனவே தொடர்ந்த வழக்கான வா.சா.ஆ.5 முதல் வா.சா.ஆ.7 தீர்ப்பாணை, தீர்ப்புரைகள், வா.சா.ஆ.1 ஆவணம் உண்மையென முடிவு செய்திருப்பது சட்டப்படி சரியல்ல என்று மேல்முறையீட்டாளர் சென்னை உயர் நீதிமன்றத்தில் SA.NO.787/2022 என்ற நம்பரில் மேல்முறையீடு செய்து மேல்முறையீடு நிலுவையில் உள்ளது என்பதையும், அந்த இரண்டாம் மேல்முறையீட்டல் ஏற்படுகின்ற முடிவு தான் இறுதி முடிவாகும் என்பதையும் கவனிக்க தவறியுள்ளார்கள். ஆகையினால் எதிர்மேல்முறையீட்டளார் வா.சா.ஆ.5 முதல் வா.சா.ஆ.7 தீர்ப்பை அனுசரித்து வா.சா.ஆ.1 உண்மையான பத்திரம் என உறுதி செய்ய வேண்டுமென்று இந்த மேல்முறையீட்டில் வாதிடமுடியாது. எனவே மேற்கண்ட காரணங்களால் கீழமை நீதிமன்றம் அசல் வழக்கு எண்.146/2019 ல் 13.02.2025 ம் தேதியில் வழங்கியுள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்து இம்மேல்முறையீட்டை அனுமதிக்க வேண்டியுள்ளார்.

9. **<u>இம் மேல்முறையீட்டு வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சினைகள்</u>**:

| | |
|---|---|
| 1. | வாதியின் சகோதரர் வாதிக்கு எழுதி வைத்த 10.08.1979 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணப்படி வழக்குச் சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்பது உண்மையா? |
| 2. | வழக்கில் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக் கூடியதா? |
| 3. | வழக்கில் கோரியுள்ள வசப் பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா? |

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.07 19:42:14 +0530

| | |
|---|---|
| 4. | வாதியின் வழக்கை அனுமதித்து, தரங்கம்பாடி, மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் அசல் வழக்கு எண்.146/2019 ல் 13.02.2025 தேதியில் வழங்கியுள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை சரியானதா? |

10. இந்த மேல்முறையீட்டின் வசதிக்காக வழக்கு தரப்பினர்கள் விசாரணை நீதிமன்றத்தில் விவரிக்கப்பட்டுள்ளவாறு குறிப்பிடப்படுகிறது.

11. மேல்முறையீட்டாளர்/பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தம்முடைய வாதுரையில் வழக்கு சொத்து பிரதிவாதியின் தந்தையால் கிரயம் கிரயம் வழங்கப்பட்டு சாகுபடி செய்து அனுபவிக்கப்பட்டு வந்து பிரதிவாதியின் தந்தை இறந்தபிறகு, பிரதிவாதியின் தந்தை ஆதிநாராயணன் வாரிசுகளான பிரதிவாதி, அவரது இரண்டு சகோதரர்கள் மற்றும் மூன்று சகோதரிகள் முழு உரிமையுடன் அனுபவித்து வந்ததாகவும், பிரதிவாதியின் தந்தை தனது சகோதரியான வாதி பெயரில் ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தது தெரிய வந்ததாகவும், மேற்படி பத்திரத்தை அனுசரித்து வாதி வசம் எடுக்கவில்லை என்றும், எனவே பிரதிவாதியின் தந்தை எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் வழக்கு சொத்தில் வாதி எவ்வித உரிமை மூலமும் கேட்க இயலாது என்றும், 10.08.1979 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் வாதி வழக்கு சொத்தை வசம் எடுத்து அனுபவிக்காத காரணத்தால் ஆதிநாராயணன் வாரிசுகள் தாவா சொத்தை எதிர் அனுபோக முறையில் அனுபவித்து வந்து சித்தியாகிவிட்டதாகவும், எனவே 10.08.1979 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் விளம்புகை மற்றும் சுவாதீன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள அசல் வழக்கை தள்ளுபடி செய்து இம்மேல்முறையீட்டை அனுமதிக்கக்கோரி வாதுரைத்துள்ளார்.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.07 19:42:20 +0530

12. எதிர்மேல்முறையீட்டாளர்/வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தம்முடைய வாதுரையில் பிரதிவாதியின் தந்தையும், வாதியின் சகோதரருமான ஆதிநாராயணன் வழக்கு சொத்து குறித்து 10.08.1979 தேதியில் வாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்துள்ளதாகவும், மேற்படி செட்டில்மெண்ட் ஆவணப்படி செட்டில்மெண்ட் ஆவண தேதியிலிருந்து வழக்கு சொத்தை வாதி வசம் எடுத்து அனுபவித்து வந்ததாகவும், வாதிக்கு சாகுபடி செய்ய அவரது சகோதரரான ஆதிநாராயணன் உயிருடன் இருந்த வரை உதவி செய்து வந்து, அவர் 2010ம் ஆண்டில் இறந்தபிறகு வாதியின் அண்ணன் மகனான பிரதிவாதி அவரது தந்தை உதவி செய்து வந்தது போலவே வாதி சாகுபடி செய்ய உதவி செய்து வந்ததாகவும், இந்நிலையில் வழக்கு சொத்தை 3ம் நபருக்கு சட்ட விரோதமாக விற்பனை செய்ய பிரதிவாதி முயற்சி செய்து அதை வாதி தடுத்துவிட்டதாகவும், வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்றும், செட்டில்மெண்ட் ஆவணப்படி சட்டப்படி சுவாதீனம் ஒப்படைக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், முறையான பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் மட்டுமே அவசியமானது என்றும், சொத்து சுவாதீனம் ஒப்படைப்பது ஒரு சட்டபடியான முன் நிபந்தனை இல்லை என்றும், இவ்வழக்கை வாதி தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபித்துள்ளதால் விசாரணை நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை உறுதி செய்து இம்மேல்முறையீட்டை தள்ளுபடி செய்யுமாறு வாதுரைத்து தம்முடைய வாதுரைக்கு ஆதரவாக 2019-1-L.W. 865 மற்றும் 2014(9) CTC 445 ஆகிய மாண்புமிகு உயர் நீதிமன்றம் மற்றும் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள சட்ட முன்தீர்ப்புகளை முன்னிட்டுள்ளார்.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.07 19:42:25 +0530

**<u>13. மேல்முறையீட்டின் பிரச்சனை எண். 1 முதல் 3– க்கான தீர்வு:</u>**

வாதி தரப்பு வழக்கானது வழக்கு சொத்து தரங்கம்பாடி தாலுக்கா, பொறையார் வட்டத்தில் உள்ள புல எண். 282/2–ல் உள்ள நஞ்சை ஏக்கர் 1.69 செண்ட் என்றும், வழக்கு சொத்து வாதியின் சகோதரரான ஆதிநாராயணன் என்பவரால் 06.09.1973 அன்று கிரயத்திற்கு வாங்கப்பட்டு வாதியின் சகோதரர் தனக்கு சொந்தமான வழக்கு சொத்தை பொறுத்து 10.08.1979 அன்று வாதிக்கு பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளதாகவும், மேற்படி செட்டில்மெண்ட் ஆவணப்படி வாதி வழக்கு சொத்தை வசத்திலும், அனுபவத்திலும் வைத்து 10.08.1979 முதல் சாகுபடி செய்து வந்ததாகவும், வாதியின் சாகுபடிக்கு அவரது சகோதரர் ஆதிநாராயணன் உயிருடன் இருந்த வரை உதவிகள் செய்து வந்தார் என்றும், வாதியின் சகோதரர் ஆதிநாராயணன் 2010 ம் ஆண்டு இறந்தபிறகு அவரது மகனான பிரதிவாதி அவரது தந்தையை போலவே வாதியின் சாகுபடிக்கு உதவி செய்து வந்ததாகவும், இந்நிலையில் பிரதிவாதி வழக்கு சொத்தை சட்ட விரோதமாக 3 ம் நபருக்கு விற்பனை செய்ய முயற்சி செய்ததாகவும், வாதி பட்டா மாறுதலுக்கு மனு கொடுத்து ஆவணங்களை பரிசீலனை செய்து உத்தரவு பிறப்பிப்பதற்கு முன்பு எதிர்வாதி வழக்கு சொத்து தங்கள் குடும்ப சொத்து என்று வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு கொடுத்து பட்டா வழங்காமல் தடுத்து விட்டார் என்றும், உண்மைகளை மறைத்து பிரதிவாதி அறிவிப்பு கொடுத்துவிட்டு வழக்கு சொத்தில் அத்து மீறி சாகுபடி செய்து வருவதாகவும், எனவே விளம்புகை மற்றும் வசப்பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

14. வாதியின் வழக்குரைக்கு பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் வழக்கு சொத்தை தனது தந்தை கிரயம் பெற்று முழு உரிமையுடன் அனுபவித்து வந்ததாகவும், பிரதிவாதி தந்தை ஆதிநாராயணன்

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.07 19:42:31 +0530

இறப்பிற்கு பிறகு பிரதிவாதி மற்றும் அவரது சகோதர சகோதரிகள் வழக்கு சொத்தை முழு உரிமையுடன் அனுபவித்து வருவதாகவும், பிரதிவாதியின் தந்தை 10.08.1979 ல் நாமினலாக வாதிக்கு சகோதரி என்ற முறையில் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளதாகவும் மேற்படி செட்டில்மெண்ட் ஆவணப்படி வாதி சொத்தை வசம் எடுக்காமல், அனுபவிக்காமல் மேற்படி சொத்தை அடைய இயலாது என்றும், அவ்வாறு செட்டில்மெண்ட் ஆவணம் உண்மை என்றாலும் கூட வழக்கு சொத்தை வாதி வசமெடுத்து அனுபவிக்காத காரணத்தினால் பிரதிவாதி மற்றும் அவரது சகோதர, சகோதரிகளும் தாவா சொத்து எதிர்அனுபோக முறையில் அனுபவித்து வந்து சித்தியாகிவிட்டதாகவும், செட்டில்மெண்ட் ஆவணப்படி இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கக்கூடியதல்ல என்பதால் விசாரணை நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்து இம்மேல்முறையீட்டை அனுமதிக்கக் கோரியுள்ளார்.

15. வழக்கில் வாதி தரப்பு சான்றாவணங்களை பரிசீலனை செய்கையில் 10.08.1979 தேதியில் பிரதிவாதியின் தந்தையும், வாதியின் சகோதரருமான ஆதிநாராயணன் என்பவர் வழக்கு சொத்து குறித்து வாதிக்கு எழுதி வைத்த இனம் சாசனம் சான்று நகல் வா.சா.ஆ.1 ஆகவும், வழக்கு சொத்திற்கான வில்லங்கச் சான்று வா.சா.ஆ.2 ஆகவும், 10.09.2013 தேதியிட்ட வழக்கு சொத்திற்கு வாதி பெறரில் பட்டா மாறுதல் செய்யக்கூடாது என்று பிரதிவாதி கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.3 ஆகவும், வழக்கு சொத்துக் குறித்து மயிலாடுதுறை முதன்மை சார்பு நீதிமன்றத்தில் நடைபெற்ற அசல் வழக்கு எண்.131/2013 ல் 02.03.2022 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 ஆகவும், மேற்படி அசல் வழக்கின் தீர்ப்புக்கு எதிரான மயிலாடுதுறை கூடுதல் சார்பு நீதிமன்ற

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.07 19:42:37 +0530

மேல்முறையீட்டு வழக்கு எண்.8/2020-ல் 21.10.2021 அன்று வழங்கியுள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை வா.சா.ஆ.7 மற்றும் வா.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

16. இவ்வழக்கில் பிரதிவாதி தரப்பு சான்றாவணங்களை பரிசீலனை செய்கையில் வழக்கு சொத்து தொடர்பான புகைப்படம் பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.3 ஆகவும், பிரதிவாதியின் தந்தை ஆதிநாராயணன் பெயரிலான வழக்கு சொத்திற்கான பட்டா சான்று நகல் பி.வா.சா.ஆ.4 ஆகவும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்திற்கு பிரதிவாதி தொகை செலுத்திய ரசீதுகள் சான்று நகல் பி.வா.சா.ஆ.5 ஆகவும், பிரதிவாதி தந்தை பெயரில் உள்ள வழக்கு சொத்து மற்றும் இதர சொத்துக்களுக்கு வழங்கப்பட்ட ரசாயான உர வினியோக ரசீது சான்று நகல் பி.வா.சா.ஆ.6 ஆகவும், 05.03.1992 தேதியிட்ட வாதி பெயரில் அவரது சகோதரர் ஆதிநாராயணன் வரி செலுத்திய ரசீது பி.வா.சா.ஆ.7 ஆகவும், வாதியின் செட்டில்மெண்ட் ஆவண சான்று நகல் பி.வா.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதியின் தந்தையின் வாரிசு சான்றிதழின் நீதிமன்றத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.9 ஆகவும், வாதி மற்றும் தரங்கம்பாடி வட்டாட்சியருக்கு பிரதிவாதி கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு சான்று நகல் மற்றும் அஞ்சல் ஒப்புகை அட்டை சான்று நகல் வா.சா.ஆ.10 முதல் வா.சா.ஆ.12 ஆகவும், 31.03.2016 ம் தேதியிட்ட பிரதிவாதி தந்தை பெயரில் பிரதிவாதி செலுத்திய வரி ரசீது வ.சா.ஆ.17 ஆகவும், தெடாக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் பிரதிவாதி தொகை செலுத்திய ரசீது வ.சா.ஆ.18 ஆகவும், அசல் வழக்கு எண். 131/2013 ன் வழக்குரை, திருத்தப்பட்ட வழக்குரை, எதிர்வழக்குரை, கூடுதல் எதிர்வழக்குரை சான்று நகல்கள் வா.சா.ஆ.19 முதல் வா.சா.ஆ.22 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.07 19:42:43 +0530

17. அசல் வழக்கின் வாதி வழக்குரை சங்கதிகளை குறிப்பிட்டு வா.சா.1 ஆக முதல் விசாரணையில் சாட்சியமளித்துள்ளார். மேலும் வாதி தம்முடைய குறுக்கு விசாரணை சாட்சியத்தில் வழக்கு சொத்தை 2010 ம் ஆண்டு வரை சாகுபடி செய்து வந்ததாகவும், வா.சா.ஆ.1 ன் அசல் ஆவணம் தம்முடைய சகோதரர் ஆதிநாராயணனிடம் இருந்தது என்றும், அவர் இறந்த பிறகு அவருடைய மகன் அந்த ஆவணம் இல்லை என்று கூறிவிட்டதாகவும், வழக்கு சொத்திற்கு 2013 ம் ஆண்டு பட்டா மாறுதலுக்கு மனு கொடுத்ததாகவும், வழக்கு சொத்தை தன் அண்ணனுடன் தான் அனுபவித்து வந்ததாகவும், தனிப்பட்ட முறையில் அனுபவிக்கவில்லை என்றும், வழக்கு சொத்தை பிரதிவாதி விற்பனை செய்ய 2013 ம் ஆண்டு முயற்சி செய்தார் என்றும், அதை தடுத்து விட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

18. இவ்வழக்கில் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தம்முடைய சாட்சியத்தில் வழக்கு சொத்து தன் தந்தைக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான் என்றும், வழக்கு சொத்தை பொருத்து தன்னுடைய தந்தை எழுதிக் கொடுத்தாக சொல்லும் செட்டில்மெண்ட் ஆவணப்படி வாதி சொத்தை வசம் எடுக்கவில்லை, அனுபவிக்கவில்லை என்று கட்சி எடுத்துள்ளதாகவும், பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்த அசல் வழக்கு மற்றும் மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான் என்றும், செட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது என்று இந்த வழக்கில் கட்சி எடுக்கவில்லை என்றாலும், ஆவணப்படி வசம் எடுக்கவில்லை, அனுபவிக்கவில்லை என்பது தான் தன்னுடைய கட்சி என்றாலும் சரிதான் என்றும், வாதயின் பெயருக்கு தன் தந்தை செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்த விவரம் 2000 ஆண்டில் தனக்கு தெரிய வந்ததாகவும், பி.வா.சா.ஆ.7 வழக்கு சொத்திற்கு வாதியின் பெயரில் தொகை செலுத்தப்பட்டது என்றாலும் தொகை செலுத்துபவர் ஆதிநாராயணன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் சரிதான் என்றும்

MUMTAJ Digitally signed by MUMTAJ
Date: 2026.04.07 19:42:48 +0530

சாட்சியமளித்துள்ளார். பிரதிவாதிக்கு ஆதரவாக பி.வா.சா.2 முதல் பி.வா.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். பிரதிவாதி தரப்பு சாட்சிகள் வழக்கு சொத்தை ஆதிநாராயணன் அனுபவித்து வந்து அவர் இறப்பிற்கு பிறகு பிரதிவாதி மற்றும் அவரது சகோதர, சகோதரிகள் சாகுபடி செய்து வருவதாகவும் சாட்சியமளித்துள்ளார்கள்.

19. இவ்வழக்கில் இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களின் பரிசீலனையில் வழக்கு சொத்து வா.சா.ஆ.1 10.08.1979 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணப்படி வாதியால் உரிமை கோரப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் பிரதிவாதியின் தந்தை எழுதி வைத்த வா.சா.ஆ.1 (பி.வா.சா.ஆ.8) செட்டில்மெண்ட் ஆவணம் நடைமுறைக்கு வரவில்லை என்றும், செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் வாதி சொத்தை வசம் எடுத்து அனுபவிக்கவில்லை என்பதால் செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் வாதிக்கு உரிமை மூலம் கிடைக்கக்கூடிதல்ல என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வாதி தரப்பில் வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் சொத்தை வசம் எடுத்து அனுபவித்து வந்ததாகவும், வாதியின் சாகுபடிக்கு அவரது சகோதரர் ஆதிநாராயணன் உதவியாக இருந்து வந்து அவர் இறப்பிற்கு பிறகு பிரதிவாதி வழக்கு சொத்தை சாகுபடி செய்ய வாதிக்கு உதவியாக இருந்து வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 10.08.1979 தேதியிட்ட பிரதிவாதியின் தந்தை மற்றும் வாதியின் சகோதரரான ஆதிநாராயணன் என்பவர் வழக்கு சொத்து குறித்து வாதிக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ.1 பிரதிவாதி தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் செட்டில்மெண்ட் ஆவணப்படி வாதி வசம் எடுத்து அனுபவிக்கவில்லை என்பதால் மேற்படி ஆவணம் நடைமுறைக்கு வரவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.07 19:42:53 +0530

20. வழக்காவணங்களை பரிசீலனை செய்கையில் 05.03.1992 தேதியிட்ட வா.சா.ஆ.7 வரி ரசீது வாதியின் பெயரில் பிரதிவாதியின் தந்தை ஆதிநாராயணன் என்பவரால் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் பிரதிவாதியின் தந்தை ஆதிநாராயணன் உயிருடன் இருந்த வரையில் மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்ய எவ்வித நடவடிக்கையும் மேற்கொண்டதாக பிரதிவாதி தரப்பில் சாட்சியம் எதுவும் முன்னிடப்படவில்லை. எதிர்மேல்முறையீட்டளார்/வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் சொத்தை தானம் வழங்குவதற்கு சுவாதீனம் ஒப்படைப்பது சட்டப்படியான முன் நிபந்தனை அல்ல என்று வாதுரைத்து தமது வாதுரைக்கு ஆதரவாக தாக்கல் செய்துள்ள 2019-1-L.W. 865 மற்றும் 2014(9) CTC 445 ஆகிய மாண்புமிகு உயர் நீதிமன்றம் மற்றும் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் சட்ட முன்தீர்ப்புகள் இவ்வழக்கின் பொருண்மைக்கு பொருந்தக்கூடியதாக உள்ளது. மேலும் வாதி தரப்பில் வழக்கு சொத்தில் தன் சகோதரர் ஆதிநாராயணன் உதவியுடன் சாகுபடி செய்து வந்து அதன் பிறகு பிரதிவாதி வாதியின் சாகுபடிக்கு உதவியாக இருந்து வந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பிரதிவாதி தரப்பில் பிரதிவாதியின் தந்தை எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் மறுக்கப்படவில்லை. மேற்கண்ட பரிசீலனையிலிருந்து வா.சா.ஆ.1 10.08.1979 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தின்படி வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்பது தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்கள் மூலம் வாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று மேல்முறையீட்டு பிரச்சனை எண்.1 வாதிக்கு ஆதரவாக தீர்வு காணப்படுகிறது. வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணப்படி வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்று மேல்முறையீட்டின் பிரச்சனை எண் 1-க்கு தீர்வு காணப்பட்டுள்ளதால் வாதிக்கு பாத்தியப்பட்ட வழக்கு சொத்தை வசம் ஒப்படைக்க பிரதிவாதி கடமைப்பட்டுள்ளார் என்று தீர்மானித்து, வழக்கில் கோரியுள்ள விளம்புகை

MUMTAJ
Digitally signed by MUMTAJ
Date: 2026.04.07 19:42:58 +0530

மற்றும் வசப் பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்று மேல்முறையீட்டின் பிரச்சனை எண். 2 மற்றும் 3 க்கு தீர்வு காணப்படுகிறது.

**21. மேல்முறையீட்டின் பிரச்சனை எண். 4 –க்கான தீர்வு:**

மேல்முறையீட்டின் பிரச்சனை எண். 1 முதல் 3 க்கு காணப்பட்ட தீர்மானத்தின்படி வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்று தீர்வு காணப்பட்டுள்ளதால் வாதியின் வழக்கை அனுமதித்து தரங்கம்பாடி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் அசல் வழக்கு எண்.146/2019–ல் 13.02.2025 ம் தேதியில் வழங்கியுள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை சரியானது என்றும், அதில் எவ்வித தலையீடும் அவசியம் இல்லை என்றும் மேல்முறையீட்டு பிரச்சனை எண்.4–க்கு தீர்வு காணப்படுகிறது.

22. **முடிவாக,** இம்மேல்முறையீட்டு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு, தரங்கம்பாடி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் அசல் வழக்கு எண்.146/2019–ல் 13.02.2025 அன்று வழங்கியுள்ள தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை உறுதி செய்யப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, 2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07–ஆம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டடது.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.07 19:43:55 +0530

சார்பு நீதிபதி,
சீர்காழி.

**நகல்:**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
தரங்கம்பாடி.

நேரிய/வரைவு தீரப்புரை
மேல்முறையீட்டுவழக்குஎண்.02/2025
நாள் –07.04.2026